A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 84 / 2022</u>**

திரு. M. குமார்,
4/46, காமராஜர் முதல் குறுக்கு தெரு,
உள்ளகரம், சென்னை–600 061.

………மேல்முறையீட்டாளர்
(திரு. M. குமார்)

எதிர்

செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

…… எதிர்மனுதாரர்
(திரு. A. ராமு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 23–09–2022</u>**

**<u>கேட்புரை நாள்: 22–12–2022</u>**

**<u>ஆணை நாள்: 12–01–2023</u>**

23.09.2022 அன்று பெறப்பட்ட திரு. M. குமார், 4/46, காமராஜர் முதல் குறுக்கு தெரு, உள்ளகரம், சென்னை–600 061 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 84/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.12.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின் விநியோகத்தில் ஏற்பட்ட தடை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும் உரிய இழப்பீடு வழங்க வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மின் இணைப்பு எண் 244–195–1382–இல் மின் விநியோகத்தில் ஏற்பட்ட தடையை சரி செய்யுமாறு எதிர்மனுதாரரிடம் தெரிவித்தும் ஒரு மணி நேரத்திற்குள் மின் தடை சரிசெய்யாததால் இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 29.05.2022 அன்று அணுகியுள்ளார்.

2.2 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1 12.07.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு:

சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 12.07.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"Order (Operative portion):***
>
> *"The supply interruption to the petitioners area on 28.05 2022 was due to fault in 33KV feeder feeding 33/11KV Nanganallur SS which was attended and supply normalized.*
>
> *The petitioner's grievance was addressed.*
>
> *Hence, the petition is treated as closed."*

### 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.12.2022 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கேட்புரை நாளில் கலந்து கொள்ள இயலவில்லை என்றும் தான் கலந்து கொள்ளாத நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் தகுதியின் அடிப்படையில் வழக்கை முடிவு செய்ய கேட்டுக் கொண்டுள்ளார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. A. ராமு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி, சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1 அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் கடந்த 28.05.2022 தேதியில் சென்னை தெற்கு-1 மின் நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவருக்கு இணையதளம் வழியாக ஒரு புகார் ஒன்றினை அனுப்பியதாகவும், அந்த புகாரின் எண்.2905221257230 எனவும், அந்த புகாரில் தன்னுடைய வீட்டு மின்னிணைப்பு எண்.244-195-1382 என்பதில் கடந்த 28.05.2022 இரவு 10.30 மணி முதல் மறுநாள் 29.05.2022 அன்று அதிகாலை 2.50 மணி வரை தன் வீட்டு மின்னிணைப்பு மூலம் தனக்கு வழங்கப்பட்ட மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும் உரிய இழப்பீடு வழங்க வேண்டியும் முறையிட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 தன்னுடைய இணைய வழி புகாரை பெற்ற சென்னை தெற்கு–1 மின் நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவர் கடந்த 12.07.2022 தேதியில் தன் புகாரின் மீது உத்தரவு பிறப்பித்து அதன் நகலை தனக்கு கொரியர் மூலம் 11.08.2022 அன்று அனுப்பி வைத்ததாகவும், மேற்படி மின் நுகர்வோர் குறைதீர்மன்ற தலைவர் உத்தரவில் கடந்த 24.06.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளதாகவும், உண்மையில், நேரடி விசாரணை சம்மந்தமாக தனக்கு எந்தவித அழைப்பாணையும் அனுப்பப்படவில்லை என்றும், மேற்படி மின் நுகரவோர் குறைதீர் மன்ற தலைவர் உத்தரவின் மூலம் கடந்த 28.05.2022 அன்று வேளச்சேரியிலிருந்து வரும் புதைவட கேபிள் இணைப்பிலும், பல்லாவரம் துணை மின்நிலையத்திலிருந்து பெறப்படும் மின்பாதையில் ஏற்பட்ட மின்தடை கடந்த 29.05.2022 தேதியன்று அதிகாலை 2.45 மணிக்கு சரி செய்யப்பட்டு மின் விநியோகம் சீராக வழங்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இதிலிருந்து தன்னுடைய வீட்டிற்கு வழங்கப்பட்ட மின்சாரம் நீண்ட நேரம் தடைப்பட்டது உறுதியாகிறது எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி மாநகராட்சி பகுதிகளில் மின்சாரம் தடைபட்டால் அதனை ஒரு மணி நேரத்திற்குள் TANGEDCO மீட்டெடுக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மின் நுகர்வோருக்கு, TANGEDCO இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், அதன்படி தன்னுடைய வீட்டிற்கு ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் தடைபட்டதால் வழங்க வேண்டிய இழப்பீட்டினை வழங்க சென்னை தெற்கு–1 மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தலைவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றும், இது சட்டத்திற்கு புறம்பானதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே, இது குறித்து எதிர்மனுதாரர் மீது (TANGEDCO) தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன் தனக்கு உரிய இழப்பீடு வழங்க உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 The Respondent submitted that the LT SC No 244-195-1382 in the name of Thiru M.Kumar. No.4/46, Kamarajar First Cross St., Ullagaram, Chennai-600061 was effected on 28.10.2017 under LT Tariff IA as per the TNERC Tariff Rules in force at that time.

6.2 The Respondent submitted that the petitioner Thiru M Kumar submitted a petition to the Chairman CGRF/CEDC/South-I/Chennai on 29.05.202. In the above CGRF petition the petitioner Thiru M.Kumar stated that

> "Yesterday no power supply in my residence from 10.30 pm to 2:50 am. Power supply not restored within one hour as per TANGEDCO rules. I am eligible for compensation. So I request to you please take action against the respondent and provide me compensation".

6.3 The Respondent stated that **the petitioner Thiru M.Kumar has not attended the CGRF meeting held on** 21.06.2022.

6.4 The Respondent stated that based on the reply given by Assistant Engineer/O&M/Nanganallur and the Assistant Executive Engineer/ O&M/Nanganallur a counter report was submitted in the CGRF.

6.5 28.05.2022 அன்று வேளச்சேரியிலிருந்து வரும் புதைவட கேபிள் இணைப்பு பழுதடைந்த காரணத்தினால் மின் துண்டிப்பு ஏற்பட்டது. நங்கநல்லூர் 33கி.வோ. துணை மின் நிலையத்திற்கு மூன்று (incoming) சப்ளை உள்ளது. அதில் 05.55 பி.ப – வேளச்சேரி UG–I 33 கி. வோ. பீடர் பால்ட் டிரிப் (fault trip) ஆனது, 06.25 பி.ப–பல்லாவரம் 33 கி.வோ பீடர் வழியாக மின் சப்ளை வழங்கபட்டது. இந்நிலையில் 09.49 பி.ப – பல்லாவரம் 33 கி.வோ. பீடரும் டிரிப் ஆனது. ஏற்கனவே இரண்டு 33 கி.வோ. பீடரும் டிரிப் ஆன நிலையில். மூன்றாவது 33 கி.வோ. பீடர் இரவு 10.38 பி.ப மணிக்கு வேளச்சேரி UG–II பீடரும் டிரிப் ஆனதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இந்நிலையில் இரவு 10.38 பி.ப மணிக்கு நங்கநல்லூர் 33 கி.வோ. துணை மின் நிலையம் முழுமையாக துண்டிக்கப்பட்டதாகவும், நங்கநல்லூர் அனைத்து 11 கி.வோ. பீடரும் மின் சப்ளை நிறுத்தப்பட்டு மனுதாரர் வீட்டிற்கு 11 கி.வோ வானுவம்பேட்டை பீடர் ஜான் கென்னடி தெரு, 250 KVA மின் மாற்றியிலும் மின் சப்ளை நிறுத்தப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து UG–I மற்றும் UG–II கேபிள் பழுது ஏற்பட்ட இடத்தை ஆய்வு செய்ய Cable Wing வந்து அதன் பின்னர் தான் பழுது சரிசெய்ய முடியும் என்பதால் பல்லாவரம் Over Head line பழுதினை சரிசெய்யப்பட்டு (Jumper cut மற்றும் Insulator PT flashover) இரவு 2.30 மணிக்கு சப்ளை சுழற்சி முறையில் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின் தடையை சரிசெய்ய இரவு நேரம் என்றும் பார்க்காமல் தொடர்ந்து பணி செய்து மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்தடைக்கு TANGEDCO இழப்பீடு வழங்க வேண்டியது இல்லை எனவும், மாறாக இரவு நேரத்தில் TANGEDCO அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றி இரவு 2.30 மணிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், இரவு 10.38மணிக்கு நங்கநல்லூர் 11 கி.வோ துணை மின் நிலையம் முழுவதுமாக மின்சாரம் தடைபட்ட நிலையில் நங்கநல்லூர் உபகோட்ட பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் அரும்பாடுபட்டு இருட்டில் மின்தடை நீக்கம் செய்து பொது மக்களுக்கு மின்சாரம் இரவு 2.30 மணிக்கு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் மனுதாரருக்கு மின்சப்ளை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற எவ்வித உள்நோக்கமும், எண்ணமும் கிடையாது எனவும், மின்பாதை முழுவதும் புதைவடமாக (UG cable) இருப்பதால் இயற்கையாக இந்த மின்தடை ஏற்பட்டதாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக துணை மின் நிலையம் முழுவதுமாக மின்தடை ஏற்பட்டது TANGEDCO–வின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 எனவே மனுதாரர் திரு.எம்.குமார். எண்.4/46. காமராஜர் முதல் குறுக்கு சென்னை–61 அவர்கள் கோரிய இழப்பீடு தொகை TANGEDCO வழங்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. M. குமார், 4/46, காமராஜர் முதல் குறுக்கு தெரு, உள்ளகரம், சென்னை–600 061 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தன்னுடைய வீட்டு மின்னிணைப்பு எண்.244–195–1382 என்பதில் கடந்த 28.05.2022 இரவு 10.30 மணி முதல் மறுநாள் 29.05.2022 அன்று அதிகாலை 2.50 மணி வரை தனக்கு வழங்கப்பட்ட மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டதாகவும், இது குறித்து சம்மந்தப்பட்ட

அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும் உரிய இழப்பீடு வழங்க வேண்டியும் விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு 11 கி.வோ வானுவம்பேட்டை பீடர், ஜான் கென்னடி தெரு 250 KVA மின் மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்படுவதாகவும், மேற்படி 250 KVA மின் மாற்றிக்கு 33கி.வோ. நங்கநல்லூர் துணை மின் நிலையத்திலிருந்து 11 KV சப்ளை வழங்கப்படுவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 நங்கநல்லூர் 33கி.வோ. துணை மின் நிலையத்திற்கு மூன்று incoming source உள்ளதாகவும், 28.05.2022 அன்று வேளச்சேரியிலிருந்து வரும் புதைவட கேபிள் இணைப்பு பழுதடைந்த காரணத்தினால் 05.55 பி.ப – வேளச்சேரி UG–I 33 கி. வோ. மின் புதைவட பாதை (UG feeder) பழுதடைந்த காரணத்தினால் மின்தடை (fault trip) ஆனதாகவும், அந்த நிகழ்வை சரிசெய்ய உடனே 06.25 பி.ப–பல்லாவரம் 33 கி.வோ பீடர்(feeder) வழியாக மின் சப்ளை வழங்கபட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 இந்நிலையில் 09.49 பி.ப – பல்லாவரம் 33 கி.வோ. மின்பாதை பழுதின் காரணமாக மின்தடை (feeder trip) ஆனதாகவும், ஏற்கனவே இரண்டு 33 கி.வோ. மின்பாதையில் மின்வழங்குவதில் தடை ஏற்பட்ட நிலையில் மூன்றாவது 33 கி.வோ. வேளச்சேரி UG–II புதைவட மின்பாதையும் இரவு 10.38 பி.ப மணிக்கு பழுதானதன் காரணமாக மின்தடை (trip) ஆனதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 வேளச்சேரி – நங்கநல்லூர் புதைவட மின்பாதை UG–I மற்றும் UG–II கேபிள் பழுது ஏற்பட்ட இடத்தை புதைவட பிரிவு (Cable Wing) வந்து கண்டுபிடித்த பின்னர் தான் பழுது சரிசெய்ய முடியும் என்பதால் பல்லாவரம் Over Head line பழுதினை சரிசெய்து (Jumper cut மற்றும் Insulator PT flashover) இரவு 2.30 மணிக்கு சுழற்சி முறையில் சப்ளை வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டிற்கு வழங்கப்பட்ட மின்சாரம் நீண்ட நேரம் தடைப்பட்டது உறுதியாகிறது எனவும், ஆகவே தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி மாநகராட்சி பகுதிகளில் மின்சாரம் தடைபட்டால் அதனை ஒரு மணி நேரத்திற்குள் TANGEDCO மீட்டெடுக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மின் நுகர்வோருக்கு, TANGEDCO இழப்பீடு வழங்க வேண்டும் என்றும்,

அதன்படி தன்னுடைய வீட்டிற்கு ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் தடைபட்டதால் வழங்க வேண்டிய இழப்பீட்டினை வழங்குமாறு முறையிட்டுள்ளார்.

7.8 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு அத்தியாயம் 5 பகிர்மான அமைப்புகளை இயக்குவதற்கான வழிகாட்டுதல்கள் (Operation Guidelines for Distribution System)–இன் கீழ் 5 பகிர்மான அமைப்பு பழுதுறல் அல்லது பொய்த்தல் (Distribution System Outage) என்ற விதியை ஆராய விரும்புகிறேன்.

*"Chapter 5: Operation Guidelines for Distribution System*

*15(5) Distribution System Outage: The interruption of the power supply to any part of the distribution system lasting more than an hour, due to the breakdown of any part of the distribution system/its components, may be termed as distribution system failure and the Licensee shall evolve a suitable supply restoration procedure for such distribution system failures under intimation to the Commission."*

7.9 மேற்கூறிய விதியை ஆராயும் போது பகிர்மான அமைப்பு பழுதுறல் அல்லது பொய்த்தல் பகிர்மான உறுப்புகளில் ஏதாவது பகுதியின் முறிவால் அல்லது செயலிழப்பால் ஒரு மணி நேரமோ அல்லது அதற்கும் கூடுதலான நேரமோ, பகிர்மான அமைப்பின் ஏதாவதொரு பகுதியில் ஏற்படும் மின் வழங்கல் இடையீடு மின் பகிர்மான அமைப்பு பழுதுறல் அல்லது பொய்த்தல் எனப்படுகிறது. இந்நிலைமைகளில் மின் வழங்கலை மீட்க, உரிமதாரர் ஆணையத்துக்கு அறிவித்துவிட்டு, தகுந்த மின் வழங்கல் மீட்பு முறைகளை உருவாக்க வேண்டும் என தெரிய வருகிறது. நங்கநல்லூர் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட மின்தடையானது தனிப்பட்ட ஒருவருக்கு நடந்த மின்தடையின்றி மின்பகிர்மான அமைப்பில் நடந்த பழுதுறலாகவே கருதப்படுகிறது.

7.10 நங்கநல்லூர் துணை மின் நிலையத்திற்கு வரும் மூன்று incoming சப்ளையும் பழுதடைந்த நிலையில் UG–I மற்றும் UG–II கேபிள் பழுது ஏற்பட்ட இடத்தை ஆய்வு செய்ய Cable Wing வந்து அதன் பின்னர் தான் பழுது சரிசெய்ய முடியும் என்பதால் பல்லாவரம் Over Head line பழுதினை சரிசெய்யப்பட்டு (Jumper cut மற்றும் Insulator PT flashover) இரவு 2.30 மணிக்கு சப்ளை சுழற்சி முறையில் வழங்கப்பட்டது தெரியவருகிறது.

7.11 மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி 27(ii)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Exemption*

*(I) xxx*

*(II) Non-compliance of the Standards contained in this regulation by the licensee shall not be treated as violation and the Distribution Licensee shall not be required to pay any compensation to affected consumers if such violation is caused due to grid failure, or a fault on the Transmission Licensee's network, or on account of the instructions given by the SLDC/SSLDC, over which the Distribution Licensee has no reasonable control.*

*(III) xxx".*

7.12 மேற்கண்ட விதி 27(ii) ன்படி மின்தொடர்பாதையில் ஏற்படும் பழுதின் பொருட்டு (over which the Distribution Licensee has no reasonable control) உரிமம்தாரர் ஒழுங்குமுறை ஆணையத்தால் விதிக்கப்பட்டுள்ள செயல்திறனை அடையவில்லை என்றால் நஷ்டஈடு செலுத்த வேண்டியது இல்லை என்று தெரிகிறது. இந்த வழக்கில் நங்கநல்லூர் 33கி.வோ. துணை மின்நிலையத்திற்கு மின்சாரம் வழங்கும் மூன்று மின்பாதைகளிலும் மின்தடை ஏற்பட்ட நிகழ்வானது மின்வழங்கும் மின்பாதை தொடர் கட்டமைப்பில் உரிமதாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நடந்த நிகழ்வாகத்தான் கருதப்படவேண்டும். எனவே, உரிமம்தாரர் ஒழுங்குமுறை ஆணையத்தால் விதிக்கப்பட்டுள்ள செயல்திறனை அடையவில்லை என்று நஷ்டஈடு செலுத்த கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மின்தடை உரிமதாரரின் கட்டமைப்பில் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நடந்த மின்தடங்களாகவே கருதப்படுவதால், உரிமம்தாரர் ஒழுங்குமுறை ஆணையத்தால் விதிக்கப்பட்டுள்ள செயல்திறனை அடையவில்லை என்று நஷ்டஈடு செலுத்த கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.84/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு. M. குமார், – BY RPAD
4/46, காமராஜர் முதல் குறுக்கு தெரு,
உள்ளகரம், சென்னை–600 061.

2. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

3. மேற்பார்வை பொறியாளர், –By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.